DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.1/2018**

Deposition of witness for Prosecution அ.சா.4

Name : முருகப்பன்
Father/ Husband Name : பழனியப்பன்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 09.09.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது தேவகோட்டையில் குடியிருந்து பிரவுசிங் சென்டர் நடத்தி வருகிறேன். என்னுடன் படித்த அண்ணாமலை என்பவரது வீட்டில் திருடு போனது சம்பந்தமாக நீதிமன்றத்தில் சாட்சி சொல்லிவிட்டு சென்றேன். பிறகு ஒரு வாரம் கழித்து திருவாடனையிலிருந்து தேவகோட்டை வந்த போது ஒத்தக்கடை அவுட்போஸ்ட் சோதனை சாவடி அருகே தேவகோட்டை நகர் போலீசார் எங்களை நிறுத்தி விசாரித்தார்கள். அப்போது எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அவர்களையும் நிறுத்தி போலீசார் விசாரித்தார்கள். அவர்கள் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டு இருப்பதாக பேசிக் கொண்டு இருந்தார்கள். பிறகு அவர்களை விசாரித்தது சம்பந்தமாக நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வேண்டும் என்று சொல்லி கையெழுத்து வாங்கினார்கள்.

2. என்னிடம் காண்பிக்கப்படும் 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னிடம் காண்பிக்கப்படும் 2 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களில் என்ன உள்ளது

என்று எனக்கு தெரியாது. அதன் பிறகு நான் வீட்டிற்கு சென்று விட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:**

1. கடந்த 10.11.2016-ம் தேதி ஆறாவயல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த போது கடந்த 16.10.2016-ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு ஒத்தக்கடை சோதனை சாவடி அருகில் 1,2 எதிரிகளை கைது செய்து விசாரணை செய்த போது அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் அதில் அனுமதிக்கப்பட்ட பகுதியில் பீரோவிலிருந்த வெள்ளிக் குத்துவிளக்கு, வெள்ளிக் காமாட்சி விளக்கு, வெள்ளி சந்தன பேழா, வெள்ளி பொட்டுக்கிண்ணம், வெள்ளி சங்கு ஆகியவைகளை எதிரிகள் எடுத்து ஆஜர் படுத்தியதை சார்பு ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றி என்னிடம் சாட்சியாக கையெழுத்து பெற்றார் என்பதை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.